மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண்.193/2021**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.பாண்டிசிவகாமி, கிரேடு III பெஞ்ச் கிளார்க் என்பவரால் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : இருளாயி (பி.வா.சா.2) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

04.06.2026

**<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

1. 2ம் பிரதிவாதியான RNA கம்பெனியும் நாங்களும் பரிவர்த்தனை பத்திரம் எழுதிக் கொண்டோம் என்றால் சரிதான். அந்த பரிவர்த்தனை மூலமாக கம்பெனிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண். 125/6–ம், வழக்கில் இல்லாத மற்றொரு சர்வே எண்.125/2–ம் இரண்டும் சேர்த்து வடக்கு பக்கம் 2 ஏக்கர் 19 செண்ட் பாத்தியப்படுத்தி கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த பரிவர்த்தனை ஆவணம் வாதிகள் தரப்பில் வாசாஆ5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி பரிவர்த்தனைஆவணத்தின் அடிப்படையில் எங்கள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்ட ஆவணம் சாசாஆ5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மொத்தம் 2 ஏக்கர் 19 செண்ட் நிலத்தினை பரிவர்த்தனை ஆவணம் மூலம் பெற்றுக் கொண்டு புல எண். 125/6 சொத்திற்கு பட்டா எண். 560 மூலம் 2 ஏக்கர் 59 செண்ட் என அதிக விஸ்தீரணத்திற்கு பட்டா பெற்றுள்ளோம் என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண். 125/6ல் தெற்கு பக்கம் 1 ஏக்கர் 12 செண்ட் 2ம் பிரதிவாதி நிறுவனத்தின் கைவசம் உள்ளது என்றால் சரிதான்.

3. எனக்கு எழுதிக் கொடுத்த வாசாஆ5 ஆவணத்தில் தெற்கே பிரமிளா ரவீந்திரகுமார் இடம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி

பிரமிளா ரவீந்திரகுமார் நாங்கள் பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்திய காலத்தில் அந்த கம்பெனியின் உரிமையாளராக இருந்தார் என்றால் சரிதான். நாங்கள் பரிவர்த்தனை செய்த காலத்தில் இருந்து அந்த சொத்தினை நானும், அதற்கு முன்பாக மேற்படி 2ம் பிரதிவாதி நிறுவனமும் அனுபவம் செய்து வந்தது என்றால் சரிதான். எனது கணவரும் 2ம் பிரதிவாதி கம்பெனியும் 23.04.2018ம் தேதி மூலம் எனக்கு பரிவர்த்தனை ஏற்படுத்தியது போக 1வது லக்க சொத்து மற்றும் புல எண்.125/2ல் மீதியுள்ள 2 ஏக்கர் 73 செண்ட்டில் வடபுறம் 74 செண்ட்டை எனது கணவருக்கு பரிவர்த்தனை செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் பிவாசாஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்படி 1வது லக்க சொத்து மற்றும் புல எண்.125/2ல் வடபுறம் 74 செண்டிற்கு எனது கணவர் தான் உரிமையாளர் என்றால் சரிதான்.

4. நான் பரிவர்த்தனை மூலம் பெற்ற சொத்திற்கும், எனது கணவர் பரிவர்த்தனை செய்த சொத்திற்கும் சேர்த்து மொத்தமாக எனது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் எனது கணவரும் இந்த வழக்கில் அவசியமான தரப்பினர் என்றால் சரிதான். நானும், எனது கணவரும் பரிவர்த்தனை செய்த சொத்தை தவிர கூடுதலாக பட்டா மாறுதல் செய்யப்பட்ட சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றி கொடுப்பதற்கு எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ள வாதிகள் இந்த சொத்தினை எந்த காலத்திலும்அனுபவம் செய்த கிடையாது என்றால் சரிதான். அவர்களுக்கு அந்த சொத்தில் உரிமை கிடையாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை –**

இல்லை.